# பொதுக்காலம் 28ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே, இன்று பொதுக்காலம் 28ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

“கடவுள் வாழும் இல்லங்கள் இரண்டு, ஒன்று விண்ணகம், மற்றொன்று பணிவும், நன்றியும் நிறைந்த உள்ளம்” என ஐசக் வால்டன் என்ற அறிஞர் ஒருவர் கூறுகின்றார். ஆம். நாம் நன்றி நிறைந்த மனதுடன் வாழ வேண்டும் என்பதையே இன்றைய முதல் வாசகமும், நற்செய்தியும் நமக்கு சிந்தனையாகத் தருகின்றது. நன்றியை இறைவன் எதிர்பார்க்கின்றாரா என்பதல்ல நம் கேள்வி. நம்மிடம் அந்த உயரிய பண்பு நிறைந்திருக்க வேண்டுமென்பதையே விரும்புகிறார் என்பதுவே அவர் உணர்த்தும் பாடமாகும்.

மனிதர்களை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

நன்றியுணர்வுடன் வாழ்பவர்கள்,

நன்றி மறந்தவர்கள்.

இன்றைய நற்செய்தியின்படி, பத்து தொழுநோயாளர்களுள் ஒன்பது பேர் அப்படியே செல்ல, ஒருவர் மட்டுமே வருகின்றார். அதேபோல, நம்மில் நன்றியுணர்வு ஒன்று வரும்போது, அதை அழுத்தி, புதைத்துவிட ஒன்பது பிற எண்ணங்கள் நம்மிலே எழுந்து வரும். இதனால் நாம் நன்றி சொல்லும் நேரங்களை விட நம் கோபதாபங்களையும், கவலைகளையும் சொல்லும் நேரம்தான் அதிகம்.

“உலகில் மிக முக்கியமான, அவசியமான செபம் இரண்டே வார்த்தைகளில் அடங்கும், அது நன்றி என்ற வார்த்தையே” என அறிஞர் ஒருவர் கூறியுள்ளார். இன்றைய முதல் வாசகத்தில், நாமான் என்ற புற இனத்து மனிதனை நன்றியுள்ள மனிதராய் இறைவன் வெளிப்படுத்துகின்றார். அதேபோல், நற்செய்தியிலும் யூதர்களால் ஒதுக்கப்பட்ட சமாரியரையே நன்றியுள்ள மனிதராக வெளிப்படுத்துகின்றார்.

இறைவனின் கரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, உரிமையுள்ள மக்களாகிய நாம், அவர் நம் வாழ்வில் அள்ளி அள்ளிக் கொடுத்த நன்மைகளை, பெற்றுக் கொண்ட ஆசீர்வாதத் தருணங்களை மறந்தவர்களாக, நன்றி சொல்ல நாவற்றவர்களாக நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால், இறைவனை அறியாத

புறஇனத்து மக்கள் அவர் செய்த நன்மைகளுக்கு தங்கள் நன்றியை மனதளவில் நிறைவாக, சாட்சியாக வெளிப்படுத்துகின்றனர். அவர்களிடம் மேலோங்கியுள்ள அந்த நற்பண்பை நாமும் பெற்று, இறையன்பிற்கு சாட்சிகளாக, அதேபோல, நம் வாழ்வில் பிறர் நமக்குச் செய்த தீமையை மறந்தவர்களாக, அவர்கள் செய்த நமக்குச் செய்த நன்மைக்கு, உதவிக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக வாழ்ந்திட வரம் வேண்டி, இக்கல்வாரிப் பலியில் நம்மை அர்ப்பணிப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. "கடவுளை நம்புவோர்க்கு இழப்பு என்பது இல்லை" என்ற இறைவா,

எங்கள் வாழ்வில் வரும் துன்பங்கள், வேதனைகள், எதிர்ப்புக்கள், நெருக்கடிகள், அவமானங்கள் போன்ற தருணங்களில், எங்களது விசுவாச வாழ்விலே தளர்ந்து, சோர்ந்து போய்விடுகின்றோம். உம்மைப் பழித்துரைக்கின்றோம். நம்பிக்கையில் தளர்ந்து விடுகின்றோம். உண்மை இறைவனாகிய உம்மை விட்டுவிலகி நிற்கின்றோம். இத்ததைய மனநிலையை மாற்றி, உம்மை நம்பும் எவருக்கும் எந்த நன்மையும் குறைபடாது, இழப்பு என்பதிருக்காது, என்பதை வாழ்வில் உறுதியாய் உணர்ந்து, உம்மையே நாடுகின்ற, தேடுகின்ற மக்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. "மேன்மை அடைய தாழ்மையே வழி" என்ற இறைவா,

தன்னையே தாழ்த்தி, இவ்வுலகில் மனிதனாக வாழந்து, தாழ்ச்சிக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினீரே, ஆனால், நாங்கள், எங்கள் குடும்பத்தில், பணித்தளங்களில் அந்தத் தாழ்ச்சியைப் பின்பற்றாது, பல நேரங்களில் "நான்" என்ற ஆணவத்துடன், யாரையும் மதிக்காது, மேட்டிமையான மனநிலையுடன், உயர்வு மனப்பான்மையுடன் பிறரை தாழ்வாகக் கருதி, ஏளனத்துடன் நடத்தி, மட்டம் தட்டி, செருக்குடன் பரிசேய மனநிலையில் வாழ்ந்து வருகிறோம். இந்த இழிவான மனநிலையைக் களைந்து, எங்கள் ஆணவப் போக்கினை மாற்றி, தாழ்ச்சியுடன் நடந்து, உம் வழியினை உறுதியுடன் பின்பற்றிட, வலிமையான மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

3. "பெறுவதற்காக மட்டும் கைகளை விரித்திராதே: கொடுக்கும் நேரத்தில் உன் கைகளை மூடிக் கொள்ளாதே" என்ற இறைவா,

ஏழ்மை, வறுமை நிலையில் துயருறும் மாந்தர்களைக் கண்டும் காணாதது போல செல்லாமல், எங்கள் வாழ்வின் வளமையை மட்டுமே முன்னிருத்தி, எங்கள்

தலைமுறைக்கே சொத்து சேர்த்து வைக்கும் தன்னல மனநிலை அகற்றி, தன்னிடமுள்ள இரண்டு மீன்களை கொடுத்து உதவிய அந்தச் சிறுவனின் பரந்த, பிறர்நல மனதினைப் பெற்று, எங்களிடமுள்ளதை பிறருக்கு கொடுத்து, பகிர்ந்து வாழ்ந்திடவும், கொடுப்பதை முகமலர்ச்சியுடன் கொடுத்திடவும் கூடிய தாராள மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. "நோயாளிகளைச் சந்திக்கத் தயங்காதே" என்ற இறைவா,

பல்வேறு நோய்களினால், துன்புறும் நோயாளிகளை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். நோயினால் துயருறுவதை விட, தன்னை கவனிக்க ஆளிலில்லாமல், அன்புடன், கனிவுடன், ஆறுதல் வார்த்தைகள் சொல்ல யாருமில்லாமல், மனதளவில் பாதிக்கப்பட்டு வருந்துவோரே அதிகம் என்பதை உணர்ந்து, எங்கள் வாழ்வில் கிடைக்கும் சில ஓய்வு நேரங்களை, வீண்வெட்டி பேச்சிலும், தொலைக்காட்சியிலும் எங்கள் வாழ்வை தொலைத்துவிடாது, இத்தகைய மாந்தர்களை தேடிச் சென்று, அவர்களுக்கு உதவிடவும், எங்கள் உடனிருப்பின் வழியாக அவர்கள் தங்கள் உள்ளத்தில் மகிழ்வினைப் பெற்றுக் கொள்ளவும், எங்கள் செபங்கள் வழியாக அவர்கள் விரைவில் குணம் அடையவும், நீர் உம் இரக்கத்தைப் பொழிந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. "கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக, அவர் வாழ்வோரின் கடவுள்" என்ற இறைவா,

எங்கள் குடும்பங்களில், உறவினர்களில், பங்குத்தளத்தில் மரித்த அனைத்து ஆன்மாக்களையும், மற்றும் யாரும் நினையாத அனைத்து ஆன்மாக்களையும் நீரே உம் விண்ணகத் திருச்சமூகத்தில் ஏற்றுக் கொள்ளும். அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் செய்த பாவங்களை, குற்றங்களை உமது பேரன்பினால், இரக்கத்தினால் மன்னித்து, அவர்களை வான்வீட்டில் சேர்த்து, உம் தூதர்களோடு உம்மை துதித்து, புகழ்ந்து பாடிடும், அந்த உன்னத பேற்றினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com